ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1478/10 - 2007 ජනවාරි 02 වැනි අඟහරුවාදා - 2007.01.02

1478/10 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச் சட்டம்**

*13 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச் சட்டமூலத்தின் 13 ஆவது பிரிவின் (1) ஆம் உபபிரிவின் (ஆ) பந்தியின் (V) உப பந்தியின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, நிதி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இந்தக் கட்டளையின் மூலம் வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து சமுர்த்தி அதிகாரசபை தொடர்பாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒதுக்கீட்டின் பிரகாரம் திறைசேரியினால் கிடைக்கின்ற முற்பணத் தொகை தொடர்பாக சமுர்த்தி அதிகாரசபை, மாவட்ட செயலக அலுவலகமொன்று அல்லது பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியில் பேணப்பட்டு வருகின்ற கீழ்வரும் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென இத்தால் குறித்துரைக்கின்றேன்.*

1. *திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ்க் கிடைத்த முற்பணத் தொகை தொடர்பாக சமுர்த்தி அதிகார சபையினால் பேணப்பட்டு வருகின்ற கணக்கு.*

2. *சமுர்த்தி அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக வகுதி 1 இல் காட்டப்பட்டுள்ள கணக்கினால் கிடைக்கின்ற முற்பணத் தொகை தொடர்பாக மாவட்டச் செயலகம் ஒன்றினால் பேணப்பட்டு வருகின்ற கணக்கு.*

3. *சமுர்த்தி அதிகார சபையின் செயற்பாடுகளுக்காக வகுதி 2 இல் காட்டப்பட்டுள்ள ஏதேனும் கணக்கொன்றின் மூலம் கிடைக்கின்ற முற்பணத் தொகை தொடர்பாக பிரதேச செயலகமொன்று பேணுகின்ற கணக்கொன்று.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்)*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2006, திசெம்பர் 29.*

*1-266*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.